இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்

சட்டக் கற்கைகள் திணைக்களம்

சட்டமாணி பட்டப்படிப்புத்திட்டம் - மட்டம் 3

இறுதிப் பரீட்சை -2017/2018

**LWU 1412/LLU3904 – சட்ட முறைமை**

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 03-03-2020 நேரம் : மு.ப 09.30 - பி.ப 12.30

ஐந்து (05) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

தெளிவற்ற கையெழுத்துக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

பகுதி I மற்றும் II ஆகியவற்றில் இருந்து குறைந்தது இரண்டு வினாக்களை தெரிவு செய்து எல்லாமாக ஐந்து (05) வினாக்களுக்கு விடையளிக்குக.

## பகுதி ஒன்று – உரோமன் சட்டம்

1. 'உரோமன் சட்டம் - சட்டமுறைமை ஒன்றின் அடித்தளம்' என்ற கருத்தேற்பின் மீது இத்தாலியில் நடைபெறும் சட்ட மகாநாடு ஒன்றில் நீர் இலங்கையை பிரதிநிதிப்படுத்துவதற்காக அழைக்கப்பட்டுள்ளீர் எனக்கருதுக.

   உரோம சட்டத்தின் வரலாறு மீது கவனம் செலுத்தி சொற்பொழிவு ஒன்றை வழங்குமாறு நீர் வேண்டப்படுகிறீர்.

   உரோமன் வரலாற்றுக் காலப்பகுதிகள் மற்றும் உரோம சட்டத்தின் தோற்றுவாய்களின் பின்னணியில் உமது சொற்பொழிவை தயாரிக்க.

   (20 புள்ளிகள்)

2. (அ) " அனைத்து உரோம பிரஜைகளும் விருப்பாவாணம் ஒன்றை ஆக்குவதற்கு, விருப்பாவணம் ஒன்றின் கீழ் எடுத்துக் கொள்வதற்கு மற்றும் விருப்பாவணத்திற்கு சான்றளிக்க அனுமதிக்கப்பட்டனர்"

   மேலே தரப்பட்ட கூற்றுடன் நீர் இணங்குகிறீரா? இயைபான சட்ட எண்ணக்கருக்கள் மற்றும் உதாரணங்களுடன் ஆராய்க.

   (12 புள்ளிகள்)

   (ஆ)உரோம சட்டத்தின் பல்வேறுபட்ட காலப்பகுதிகளில் பயன்படுத்தப்பட்ட விருப்பாவணங்களின் வேறுபட்ட வடிவங்களை ஆராய்க.

   (08 புள்ளிகள்)

   (மொத்தம் 20 புள்ளிகள்)

3. உரோம சட்டம் தொடர்பில் பின்வரும் கூற்றுக்களின் சரியான தன்மையை கருத்திற் கொள்க.

   i. உரோமில் அதனுடைய வரலாற்றின் பல்வேறுபட்ட காலப்பகுதிகள் ஊடாக சட்டவாக்க அதிகாரம் மாற்றமடைந்தது.

   ii. சீதனமென்பது *(Dos)* திருமணம் நடைபெற்றமைக்கு சான்றாவதுடன் திருமணத்தை வலிதற்றதாக்குவதற்கான(not *concubinage*) மன எண்ணத்திற்குரிய சான்றல்ல.

   iii. சட்டத்தை கோவைப்படுத்துவதில் ஐஸ்டீனியன் குறிப்பிடத்தக்களவு பங்களிப்பை வகித்தார்

   iv. குடும்பம் ஒன்றின் உயிர்வாழ்ந்து வருகின்ற மூத்த ஆண் மூதாதையர் அவருடைய குடும்பம் மீது எல்லையற்ற அதிகாரத்தை பிரயோகித்தான்.

(4X5=20 புள்ளிகள்)

4. 1) (அ) கமிலியா, ஒஸ்டின் என்பவனை *Confarreatio* வை பூர்த்தி செய்து மணமுடித்தான். அவர்களுக்கு ஒனுஸ் என்ற மகன் இருந்தான். ஒனுஸ் வேலை செய்ய தொடங்கிய போது கடுமையான சுகவீனம் ஒன்றின் காரணமாக அவதியுற்று அங்கவீனம் அடைந்தான். அவனுடைய மகனுடைய நிலையை கண்டு மனரீதியாக பாதிபுற்ற ஒஸ்டின் தற்கொலை செய்து கொண்டான். தற்போது அங்கவீனமான மகனுடன் தனியாக வாழ்ந்து வருகின்ற கமிலியா பிள்ளை ஒன்றை மகவேற்பு செய்ய விரும்புகிறாள்.

(ஆ) செனற்றர் ஒருவரான பப்லோ, பற்றீசியா குடும்பம் ஒன்றினால் கைவிடப்பட்ட செல்வந்த நடிகையான சில்வியாவை மணம் முடிக்க எண்ணினான். வலிதான திருமணம் ஒன்றிற்கான தேவைப்பாடுகளை அறிந்து கொள்ள பப்லோ விரும்புகிறான். *சீதனத்தை (Dos)* யார் வழங்க தேவைப்படுத்தப்பட்டுள்ளார் என்பதனையும் *Dos* தொடர்பாக தான் ஏதேனும் முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க அவசியமா என்பதையும் அறிந்து கொள்ள சில்வியா விரும்புகிறாள்.

கமிலியா, பப்லோ மற்றும் சில்வியாவிற்கு ஆலோசனை வழங்குக.

(5X2=10 புள்ளிகள்)

II. "உரோம சட்டம் உடைமை என்பதில் இருந்து வேறுபடுத்தி சொந்தம் என்ற கோட்பாடை தெளிவாக எடுத்துரைக்கிறது."
மேலே கூறப்பட்ட கூற்றுடன் நீர் இணங்குகிறீரா?

இயைபான சட்ட கருத்தேற்பு மற்றும் நடைமுறை உதாரணங்களுடன் உமது விடையை ஆதாரப்படுத்துக.

(10 பள்ளிகள்)

## பகுதி இரண்டு - சட்டமுறைமை

5. "நீதிமன்றங்கள் தற்போது நோக்கம்சார் அணுகு முறையை கையாள்கின்றன. இவ்வணுகு முறை சட்ட விளக்கம் ஒன்றின் உண்மையான நோக்கத்திற்கு உண்மையான விளைவை தருவதுடன், அந்த சட்டவாக்கம் எந்த பின்னணியின் மீது ஆக்கப்பட்டதோ அதனை சூழவுள்ள மேலதிக விடயங்களையும் கவனத்தில் கொள்ள தயாரகவுள்ளது.

*Pepper V Hart* (1993) IAII ER at P.50.

நியதிச்சட்ட பொருள்கோடல் தொடர்பான விதியினை கருத்திற்கொண்டு மேலேயுள்ள கூற்றை ஆராய்க
உமது விடை இயைபான தீர்ப்புச்சட்டத்தின் உதவியுடன் ஆதாரப்படுத்தப்பட வேண்டும்.
(20 புள்ளிகள்)

6. "ஒப்புரவானது அனைத்து சட்டங்களும் இறுக்கமாக வரக்கூடிய போக்கில் இருந்து தோன்றுகிறது....ஒப்புரவானது கடுமையான சட்டம் ஒன்றின் மூலம்வரக்கூடிய இறுக்கத்தன்மையை தணிப்பதற்காக உண்மையான வடிவத்தில் வருகிறது.

*Lord Denning, The Family Story (1981).P.176*

மேலே தரப்பட்ட கூற்றின் பின்னணியில் ஒப்புரவு ஒன்று சட்டத்தோற்றுவாயாக அங்கீகரிக்கப்பட்டமைக்கான நியாயத்துடன் தொடர்புபடுத்தி விமர்சித்து ஆராய்க.

7. (i) நிலுபுல் அண்மையில் வெளிநாட்டில் இருந்து இலங்கைக்கு திரும்பி வந்ததோடு,வெதகம என்ற கிராமத்தில் வசித்து வருகிறான். நிலுபுல் அவுஸ்திரேலியாவில் காடுகளில் இருந்து மருத்துவ தாவரங்களை சேகரித்தல் தொடர்பான ஒரு விஞ்ஞான ரீதியான பயிற்சியைப் பெற்றுக் கொண்டான். அவன் தன்னுடைய அறிவை பயன்படுத்தி வெதகமவில் உள்ள வனத்தில் இருந்து மருத்துவ தாவரங்களை சேகரிக்க தொடங்கினான்.

கிராமத்தவர்கள் பலொஸ் என அழைக்கப்படுகின்ற அந்த கிராமத்தை சேர்ந்த ஒரு குறிப்பிட்ட சமூகம் மாத்திரம் மருத்துவ தாவரங்களை சேகரிக்க உரிமையுள்ளது எனவும் இது நினைவு தெரிந்த நாளில் இருந்து வருகின்ற ஒரு நடைமுறை எனவும் கூறி நிலுபுல்லை மருத்துவ தாவரங்களை சேகரிப்பதில் இருந்து தடுத்தனர். மேலும் கிராமத்தை சேர்ந்த முதியவர்கள் நிலுபுல் குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் அல்ல எனவும் குறிப்பிட்டனர். எவ்வாறாயினும், அத்தகைய சமூகத்தின் அனைத்து நடவடிக்கைகளும் இலங்கைச் சட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்டுள்ளது.

உள்நாட்டு வழக்காறு ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கு நீதிமன்றங்கள் கையாண்ட பரீட்சைக்கு அவதானம் வழங்கி நிலுபுலுக்கு அறிவுரை வழங்குக.
(10 புள்ளிகள்)

ii. "இந்த சுவாரஸ்யமான வினாவுக்குரிய விடை யாதெனில் நீதிமன்ற முற்தீர்ப்பு என்ற முழுமையான கோட்பாடு நீதிபதிகள் நிகழ்வு அல்லது சட்டப்பிழை ஒன்றை மேற்கொள்ள மாட்டார்கள் என்ற ஒரு பொது விதியின் மீதான எண்ணக்கருவில் தங்கியுள்ளது."

*Arthur L. Goodhart,Determining the Ratio Decidendi of a case, The Yale Law Journal, Vol. 40 No 2 (Dec,1930),pp.163-183.*

*stare decisis* என்ற கோட்பாட்டின் பின்னணியில் மேலே தரப்பட்ட கூற்றை விமர்சித்து மதிப்பிடுக.

(10 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

8. உலக சுகாதார நிறுவனத்தின் புகையிலை கட்டுப்பாடு சம்பந்தமான கட்டமைப்பு சமவாயத்திற்கு ஒரு திறத்தவாராக வந்த பின்பு சீலந்து அரசு 2017 ஆம் ஆண்டின் 9 ஆம் இல. புகையிலை தேசிய அதிகார சபை" என பெயரிடப்பட்ட சட்டம் ஒன்றை ஆக்கியது.

சட்டத்தினுடைய முகவுரை பின்வருமாறு குறிப்பிடுகிறது.

"இத்தால் புகையிலையை புகைபிடித்தலினால் ஏற்படும் அனைத்து விதமான பாதகமான விளைவுகளில் இருந்து பொது மக்களை பாதுகாப்பது தேவைப்பாடு ஒன்றாக வருகிறது."

சட்டத்தின் பிரிவு 9 பின்வருமாறு ஏற்பாடு செய்கிறது :
"எந்தவொரு நபரும் மூடிய பொது இடத்திற்குள் எந்தவொரு புகையிலை பொருட்களையும் புகைபிடித்தல் ஆகாது."

வடசீலந்து பல்கலைக்கழகம் சீலந்து நாட்டின் தலைநகரில் அமைந்துள்ள ஒரு தேசிய பல்கலைக்கழகம் ஒன்றாகும். மூன்று பக்கங்களை மாத்திரம் மூன்று சுவர்களால் சூழப்பட்டிருந்த பொறியியல் பீடத்திற்கு சொந்தமான உணவுசாலை "திறந்த உணவுசாலை" என அழைக்கப்பட்டது. உணவகத்தின் திறந்த பகுதி விளையாட்டு மைதானத்தை நோக்கியிருந்தது. உணவகம் கூரை ஒன்றினால் மூடப்பட்டிருந்ததுடன் அதனுடைய தரைப்பகுதி சீமெந்து இடப்பட்டிருந்தது.

இந்த பல்கலைகக்கழகத்தின் மாணவனான மல்ஷான் பகலுணவு நேரத்தின் போது உணவகத்தில் இருந்து சிகரட் புகை பிடித்தான். அப்போது உணவகம் மாணவர்களால் நிரம்பி வழிந்தது. அவன் சட்டத்தின் பிரிவு 9 இன் கீழ் தவறு ஒன்றை இழைத்தமைக்காக குற்றம் சாட்டப்பட்டான். திறந்த உணவகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ள உணவகம் மூடப்பட்ட பொது இடம் அல்ல எனவும் உணவகத்தின் ஒரு பகுதியில் சுவர் ஒன்று இல்லை எனவும் வாதாடினான். நீர் ஒரு சட்டத்தரணி என கருதி பொருத்தமான நியதிச்சட்ட பொருள்கோடல்களை இணங்கண்டு மல்ஷானுக்கு ஆலோசனை வழங்குக.

பொருத்தமான தீர்ப்புச்சட்ட சட்டவியலுடன் தொடர்புபடுத்தி உமது விடையை ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)